பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**08 07 2026** **6 45**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலகளாவிய வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதில் இந்திய பொருளாதாரம் முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணைய் விலை நிலையாக நீடிக்கும் பட்சத்தில், உள்நாட்டிலும் பெட்ரோல் மற்றும் டீசலின் விலையில் மாற்றமிருக்காது என்று மத்திய அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

3. முதலமைச்சர் திரு. விஜய்-யின் கரூர் பயணம் தொடர்பாக, திமுக பதற்றம் அடைவது ஏன் என்று அமைச்சர் திரு. நிர்மல் குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

4. என்.எல்.சி-யின் 3 சதவீத பங்கு விற்பனையை மத்திய அரசு கைவிட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் திரு. சண்முகம் வலியுறுத்தியுள்ளார்.

5. உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் சுவிட்சர்லாந்து, அர்ஜென்டினா அணிகள் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

உலகளாவிய வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதில் இந்திய பொருளாதாரம் முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷிய தலைநகர் ஜகார்தாவில் இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றிய அவர், சீர்திருத்தம், செயல்பாடு மற்றும் மாற்றம் என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில் தமது அரசு செயல்பட்டு வருவதாக கூறினார்.

100 கோடிக்கும் அதிகமான மக்களின் கனவுகளை நனவாக்கும் வகையில் வளர்ச்சியை நோக்கி இந்தியா பயணித்து வருவதாகவும், எரிசக்தி முதல் செமிகண்டக்கடர் உற்பத்தி வரை பல்வேறு துறைகளில் விரைவான முன்னேற்றத்தை இந்தியா கண்டு வருவதாகவும் கூறினார்.

தற்சார்பு நிலையை நோக்கிய இந்தியாவின் பயணம், இந்தோனேஷியா மட்டுமல்லாது ஒட்டுமொத்த ஆசியான் நாடுகளுக்கும் வலுவான உந்து சக்தியாக மாறியுள்ளது என்று பிரதமர் குறிப்பிட்டார்.

இந்தியாவும் - இந்தோனேஷியாவும் வளர்ச்சிக்கான பொதுவான தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படுவதாகவும், இரு நாடுகளும் இணைந்து வேகமான வளர்ச்சியை நோக்கி சென்றுகொண்டிருப்பதாகவம் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<>>>>

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை தொடர்ந்து நிலையாக இருக்கும்பட்சத்தில் இந்தியாவில் எண்ணெய் மற்றும் எரிவாயு வழங்கல் சீராக தொடரும் என்று மத்திய அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணையின் விலை அதிகரிக்காமல் தொடரும் பட்சத்தில் உள்நாட்டிலும் பெட்ரோல் மற்றும் டீசலின் விலையில் மாற்றமிருக்காது என்று கூறினார்.

அண்மையில் மேற்காசியாவில் ஏற்பட்ட பதற்றமான சூழலில் உலக அளவில் எரிபொருள் வழங்கலில் இடையூறு ஏற்பட்டபோதிலும் இந்தியா ராஜ்ஜிய ரீதியிலான நடவடிக்கைகள் மூலம் சவால் நிறைந்த சூழலை திறம்பட கையாண்டதாக அவர் தெரிவித்தார்.

உள்நாட்டு உற்பத்தி, பரவலான இறக்குமதி உத்திகள் போன்றவற்றால் அந்த சூழலை மத்திய அரசு கையாண்டு, எரிபொருள்

தட்டுப்பாடு இல்லாத நிலையை உருவாக்கியதாக திரு. ஹர்தீப் சிங் புரி கூறினார்.

<<<<>>>>

முதலமைச்சர் திரு. விஜய் கரூருக்கு பயணம் மேற்கொள்ள இருப்பதை அறிந்து, திமுக பதற்றம் அடைவது ஏன் என்று மாநில சட்டத்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், முதலமைச்சர் மாநிலத்தின் எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் செல்வதற்கு உரிமை உள்ளதாக கூறினார்.

ஆனால் முதலமைச்சரின் பயணத்தை எதிர்த்து உச்சநீதிமன்றம் வரை சென்று, திமுகவினர் நீதிபதிகளின் கண்டனத்திற்கு ஆளானதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

த.வெ.க. சட்டப்பேரவை உறுப்பினரிடம் குதிரை பேரம் பேசிய வழக்கில் சம்மன் அனுப்பிய நிலையில், முன்னாள் அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி காவல் நிலையத்தில் ஆஜராகாமல் தவிர்ப்பது ஏன் என்றும் திரு. நிர்மல் குமார் கேள்வி எழுப்பினார்.

<<<<>>>>

பொதுத்துறை நிறுவனமான என்.எல்.சி-யின் 3 சதவீத பங்கு விற்பனையை மத்திய அரசு கைவிட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. சண்முகம் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடலூர் மாவட்டம் நெய்வேலியில் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. வீரபாண்டியன் உள்ளிட்ட கட்சியினருடன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மத்திய அரசு என்.எல்.சி. பங்கு விற்பனையை கைவிடாவிட்டால் அனைத்துக் கட்சியினரையும் ஒன்றுதிரட்டி மாநில அளவில் போராட்டம் நடத்தப்படும் என்று திரு. சண்முகம் கூறினார்.

<<<<>>>>

பள்ளிக் குழந்தைகளை ஏற்றிச் செல்லும் ஆட்டோக்கள் உள்ளிட்ட வாகனங்கள் அரசின் போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு. விஜய் தமிழன் பார்த்திபன் வலியுறுத்தியுள்ளார்.

பள்ளிக் குழந்தைகளை ஏற்றிச் செல்லும் ஆட்டோக்கள் மீதான புகார் தொடர்பாக போக்குவரத்துத் துறை இயக்குநருடன் அவர் நேற்று ஆலோசனை நடத்தினார்.

அப்போது அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிக அளவில் பள்ளிக் குழந்தைகளை ஏற்றிச் செல்லக்கூடாது என்றும், அத்தகைய வாகனங்களின் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

முதலுதவிப் பெட்டி, அவசர கால காவல்துறை உதவி எண்கள் போன்றவை வாகனங்களில் தெளிவாக காட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும் திரு. விஜய் தமிழன் பார்த்திபன் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

<<<<>>>>

தமிழகத்தில் பருவமழை தொடங்க இருப்பதையொட்டி திறந்தவெளி நேரடி நெல்கொள்முதல் மையங்கள் மற்றும் சேமிப்புக் கிடங்குகளில் மழைநீர் பாதிப்பு ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அதிகாரிகளை அமைச்சர் திரு. வெங்கடரமணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர்கள் மற்றும் தரக் கட்டுப்பாட்டு அலுவலர்களுடன் நெல் கொள்முதல், அரவை மற்றும் பல்வேறு செயல்பாடுகள் குறித்து அமைச்சர் ஆலோசனை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில் தரமான உணவு தானியங்களை கொள்முதல் செய்வதுடன், பொதுமக்களுக்கு உயர் தரத்திலான தானியங்களை வழங்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் செயல்பாடுகள் வெளிப்படைத் தன்மையுடன் இருப்பதுடன், விவசாயிகளின் நலன் பாதுகாக்கப்பட்டு தடையின்றி உணவுப் பொருள் விநியோகம் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் திரு. வெங்கடரமணன் அப்போது வலியுறுத்தினார்.

<<<<>>>>

நாமக்கல மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ், மக்கும் கழிவுகளில் இருந்து தயாரிக்கப்பட்ட செழிப்பு பசுமை உர விற்பனையை மாநகராட்சி ஆணையர் திரு. செல்வ பாலாஜி தொடங்கி வைத்தார்.

இந்த உரம் விவசாயிகளுக்கு பெரிதும் உதவியாக உள்ளது என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Kannan — 38 Sec)**

<<<<>>>>

***<u>இருவரிச் செய்திகள்</u>***

ஈரான் மீது அமெரிக்க ராணுவம் நேற்று மீண்டும் தாக்குதலை தொடங்கியதுடன், கச்சா எண்ணெய் விற்பனைக்கான அனுமதி உரிமத்தையும் திரும்பப் பெற்றுள்ளது.

-----------

இந்தியாவுடனான எல்லை தொடர்பான பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முடியும் என்று நேபாள வெளியுறவு அமைச்சர் **Shishir Khanal** தெரிவித்துள்ளார்.

-----------

பல்வேறு துறைகளில் எல்-நினோ ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பிரதமரின் முதன்மைக் செயலாளர் டாக்டர் பி.கே. மிஸ்ரா தலைமையில் தில்லியில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

-----------

கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் 3 பேர் உயிரிழந்த நிலையில் 7 பேரை தேடும் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

-----------

விழுப்புரம் மாவட்டம் கானை, விக்கிரவாண்டி ஒன்றியங்களில் நடைபெற்று வரும் அரசு திட்டப் பணிகளின் செயல்பாடுகள் குறித்து உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ஆனந்த் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

-----------

நாமக்கல் மாவட்டத்தில் அனைத்து துறை அலுவலர்கள், தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் பங்கேற்கும் காலாண்டு நுகர்வோர் குறைதீர் கூட்டம் ஆட்சியர் திரு. மதுபாலன் தலைமையில் இன்று நடைபெறுகிறது.

-----------

கோவை மாவட்டம் பொள்ளாச்சி ஆனைமலை அருகேயுள்ள பொங்காளியூரில் உள்ள ஆவின் கூட்டுறவு பால் கொள்முதல் மையத்தில் அமைச்சர் திருமதி விஜயலட்சமி ஆய்வு மேற்கொண்டார்.

-----------

தேனி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய - மாநில அரசுகளின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக் கூட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

-----------

வேலூர் மாவட்டத்தில் நடப்பாண்டிற்கான ''சமூக நல்லிணக்க ஊராட்சி விருது'' பெற விரும்பும் ஊராட்சிகள் இம்மாதம் 31ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்று ஆட்சியர் திருமதி லீலா அலெக்ஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

-----------

தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் சார்பில் எதிர்கால பொறியியல் பாடத்திட்டம் - பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு திறனை மேம்படுத்துதல் குறித்த கருத்தரங்கை அமைச்சர் திரு. விஸ்வநாதன் தொடங்கி வைத்தார்.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் சுவிட்சர்லாந்து அணி காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

வான்கூவரில் நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அந்த அணி கொலம்பியாவை பெனால்டி சூட்-அவுட் முறையில் **4-3** என்ற கோல் கணக்கில் வென்றது.

அட்லாண்டாவில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் எகிப்து அணியை **3-2** என்ற கோல் கணக்கில் வென்ற அர்ஜென்டினா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-------------

இந்தியாவுக்கு எதிரான **3**வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி **125** ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நாட்டிங்ஹாமில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **7** விக்கெட் இழப்புக்கு **201** ரன் எடுத்தது.

ஃபில் சால்ட் அதிகபட்சமாக **70** ரன் சேர்த்தார்.

சாம் கரண் ஆட்டமிழக்காமல் **41** ரன் எடுத்தார்.

**202 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி அடுத்தடுத்து சொற்ப ரன்களில் விக்கெட்டுகளை இழந்தது.**

**11 புள்ளி 4 ஓவரில் 76 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.**

**இங்கிலாந்து அணி இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரில் 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.**

**<<<<The End>>>>**